ஓம்



# இந்து இளைஞர் மன்றம்

**மட்டக்களப்பு.**

ஸ்தாபிதம்: *1968* பதிவு இல: *6/2/BT/1/17*

# 7வது ஆண்டறிக்கை

*(1–1–84 — 31–3–85)*

# ஆண்டுப் பொதுக்கூட்டம்

*1985*ம் ஆண்டு ஆனி மாதம்

*29*ம் திகதி சனிக்கிழமை

6/7/85

உ
சிவமயம்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# 7வது பொதுக்கூட்ட அறிவித்தல் 29-6-85

அன்புடையீர்,

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் 7 வது பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மன்ற மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. சுவாமி ஜீவனானந்தா அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆசியுரை வழங்குவார்.
3. சென்ற கூட்டறிக்கை.
4. பொதுக் காரியதரிசியவர்களின் 7வது ஆண்டறிக்கை
5. தனாதிகாரியவர்களின் 7வது வரவு செலவு அறிக்கை
6. தலைமையுரை.
7. புது அங்கத்தவர்கள் சேர்த்தல்
8. பிரேரணைகள்.
9. உத்தியோகத்தர்கள் தெரிவு.
10. நன்றியுரை.
11. தேவாரம்.

**இ. இரத்தினசிங்கம்**
பொதுக்காரியதரிசி

10–6–85

**மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்**
மட்டக்களப்பு.

குறிப்பு: பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் அவற்றை 23–6–85ஆம் திகதிக்கு முதல் தலைவரிடம் அல்லது பொதுக் காரியதரிசியிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

## 1984ம் ஆண்டு ஆனி மாதம் 16ம் திகதி பொதுக்கூட்டத்தில் தெரிவான உறுப்பினர்கள்

போஷகர்கள்

திரு. க. கணபதிப்பிள்ளை B. A., F. R. G. S.
Dr. கே. இராசசிங்கம்

தலைவர்

ம. சிவநேசராசா (B. A. Cey)

உப தலைவர்கள்

Dr. V. ஜெகநாதன்

திரு. கா. தங்கவடிவேல்
சட்டத்தரணி

பொதுக்காரியதரிசி

இ. இரத்தினசிங்கம்

உப காரியதரிசி

திரு. சு. தில்லைநாதன்

விளையாட்டுக் காரியதரிசி

திரு. கே. சிவராஜரெட்ணம்

கலாச்சாரக் காரியதரிசி

திரு. த. செல்வநாயகம்

சமூகசேவை காரியதரிசி

திரு. வி. த. குமாரசாமி

தனாதிகாரி

இ. சீனித்தம்பி

நிர்வாக சபை அங்கத்தவர்கள்

Dr. V. சிவலிங்கம்
திரு. இ. அரியநாயகம்
திரு. மா. செல்வநாயகம்
திரு. கே. வி. எம். மாணிக்கவாசகர்
திரு. இரா. நாகலிங்கம் C. A. S., A. G. A.
திரு. கே. கார்த்திகேசு
திரு. T. பூபாலசிங்கம்
திரு. V. சிறிபத்மநாதன்
திரு. த. பத்மநாதன்
திரு. T. புவிராஜசிங்கம்
திரு. ஆர். ஏ. சோமசுந்தரம்
திரு. பெ. தர்மலிங்கம்

பொறியியல் பகுதி ஆலோசகர்கள்

திரு. ஆர். சிறிஸ்கந்தராசா E. E.
திரு. வி. சிவகணேசர் T. O.

உ
சிவமயம்

# மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்
# 7வது ஆண்டறிக்கை
## (1-1-84 - 31-3-85)

அன்பர்களே!

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் கடந்த 1984ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 1985ஆம் ஆண்டு பங்குனி மாதம் முடியவுள்ள காலத்துக்கான ஆண்டறிக்கையைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

1984ஆம் ஆண்டு ஆனி மாதம் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தில் திருவாளர் ம. சிவநேசராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிருவாகசபை கடந்த ஆண்டில் எதுவித மாற்றமுமின்றி மிகவும் திறமையுடன் செயல் புரிந்துவந்தது.

**கூட்டங்கள்:**

கடந்த 15 மாத காலத்தில் எதுவித இன்னல்களுமின்றி 15 மாதாந்த நிர்வாகசபைக் கூட்டங்களும் 2 விசேட நிர்வாகசபைக் கூட்டங்களும் ஒரு வருடாந்த பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

**நிதி சேகரிப்பு:**

சென்ற பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒரு இலட்சம் ரூபா நிதி சேகரிப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ரூபா 100/- பெறுமதியான 1000 டிக்கட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டது. இதன்மூலம் ரூபா 38,901-00 ச. கிடைக்கப்பெற்றது. அத்துடன் கொடி விற்பனைமூலம் ரூபா 18,852-79 ச. கிடைக்கப்பெற்றது. இதைவிட லிஸ்ற் மூலமாகவும் நன்கொடை ரூபா 7270-00 ச. கிடைக்கப்பெற்றது வெளிநாடுகளிலுள்ள நண்பர்களுக்கு நன்கொடை கேட்டு சுமார்

20 கடிதங்களும் உள்ளூரவர்களுக்கு 10 கடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டது இதில் வெளிநாட்டிலுள்ள ஒரு அன்பர் ரூபா 1440/- அனுப்பிவைத்துள்ளார். இன்னும் ஒரு அன்பர் தான் இயன்ற அளவு பணம் சேகரித்து அனுப்பிவைப்பதாக தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளார்.

நாங்கள் நிதி சேகரிக்கச் சென்ற இடமெல்லாம் நல்ல வரவேற்புத் தந்து தங்களால் இயன்ற பண உதவியைச் செய்தார்கள். இவர்களுக்கு எங்கள் மன்றத்தின் சார்பில் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இந்துக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் தேவை என்பதை நன்கு உணர்ந்துள்ளார்கள். மேலும் இப்பணியைச் செய்பவர்களை வாயார வாழ்த்தினார்கள். இப்பணிக்கு பணம் தர தாமாகவே முன்வருமளவுக்கு ஆர்வமும் தாராளமனப்பான்மையும் கொண்டுள்ளார்கள்.

கொடி விற்பனை செய்வதில் இளைஞர்களும் முதியோர்களும் பங்கு கொண்டு உண்டியல்களில் பணம் வாரி வழங்கினார்கள். குறிப்பாக பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வம் காட்டினார்கள். இக்கொடி தினம் நடத்துவதற்கு உத்தரவு கூட ஒரு கட்டத்தில் மறுக்கப் பட்டது. நாங்கள் கௌரவ பிராந்திய அபிவிருத்தி அமைச்சருடன் தொடர்புகொண்டு கொடி விற்பனை செய்ய அனுமதி பெற்றோம். அன்னாருக்கு எங்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம் இந்தக் காலத்தில் சூழ்நிலை சுமுகமாக இல்லாமையால் எதையும் வெளியில் வந்து செய்யமுடியாத நிலையாகவிருந்தது. இளைஞர்கள் ஆர்வங்கொண்டிருந்தாலும் நாங்களே அவர்களுடைய நலன்கருதி இவ்வைபவங்களில் பகிரங்கமாக ஈடுபட இடமளிக்கவில்லை. அவர்களுடைய வருங்காலம் நலமாகவிருக்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

எங்களால் கௌரவ பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் செல்லையா இராசதுரையவர்களுக்கு நிதி உதவிகேட்டு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று இரு கட்டத்தில் ரூபா 49600/- தந்து உதவியுள்ளார். இப்பண உதவி மிகவும் நெருக்கடியான நேரத்தில் கிடைக்கப்பெற்றது மறக்கமுடியாத நன்றியாகும். அத்துடன் மேலும் ஒரு இலட்சம் ரூபா நன்கொடை தருவதற்கு மட்டக்களப்பு

அரசாங்க அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எங்களுடைய மன்ற தொழில் நுட்பப் பகுதி ஆலோசகர் திருவாளர் சிறிஸ்கந்தராசா அவர்கள் திட்டங்கள் தயார் செய்துள்ளார் அதன்பிரகாரம் இப் பணம் கூடிய விரைவில் கிடைக்குமென நம்புகிறோம்.

**கட்டடப் பணிகள்:**

மன்றத்தின் செயலகப் பகுதியை மை பூசி திருத்தங்களும் செய்துள்ளோம் இதற்கு செல்வன் முருகையா மகேந்திரன் அவர்கள் நிதி உதவி செய்துள்ளார்.

பிரார்த்தனை மண்டபத்தின் கொங்கிறீற் தளம் செப்பனிடப்பட்டு மை பூசி அழகுறச் செய்துள்ளோம். இதற்கு மன்றப் பணத்தில் ரூபா 7000/- செலவு செய் துள்ளோம்.

மத்திய மண்டபத்துக்கான புனருத்தாரண வேலைகளை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனனந்தா அவர்கள் தொடங்கிவைத்தார்கள். தற்போது, இடிந்துவிழுந்த கொங்கிறீற் தளம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு சுவர்மட்டம் வரையும் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. முகட்டுக்கான இரும்பு ரஸ் ஆறு செய்வதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டு முற்பணம் ரூபா 10,000/- கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரும்பு ரஸ் ஒவ்வொன்றும் ரூபா 10,500/- செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒன்றை உதயாமோட்டோர் ஸ்தாபனத்தார் தங்கள் செலவில் செய்து தருவதாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இன்னும் ஒன்றை மட்டக்களப்பு சிங்களவாடியைச் சேர்ந்த திருவாளர் இ மயில்வாகனம் குடும்பத்தார் தங்கள் செலவில் செய்வித்துத் தருவதாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்,

**தளபாடங்கள்:**

மன்ற அலுவலகத்தில் தஸ்தாவேசுகள் மற்றும் பெறுமதியுள்ளவைகளை பத்திரப்படுத்தி வைப்பதற்கு றாக்கை அலுமாரி போன்றவை நீண்டகாலமாக இல்லாமல் இருந்தது. தற்போது மரத்தாலான றாக்கைகளும் இரும்பு அலுமாரி ஒன்றும் ரூபா 2825/- செலவில் புதிதாக வாங்கப்பட்டுள்ளது.

மன்றத்தின் கூட்டங்கள் நடத்துவதற்கு போதியளவு நாற்காலிகள் இல்லாமையால் தற்போது ரூபா 2835–50 ச. செலவில் 11 இரும்பு நாற்காலிகள் வாங்கப்பட்டுள்ளன. பிரார்த்தனை மண்டபத்துக்கு விரிப்பதற்கு பத்தடி நீளமுள்ள பத்து பந்திப் பாய்கள் வாங்கப்பட்டுள்ளன. மேடைக்கு அலங்காரமான லினொன் விரிப்பு ஒன்று ரூபா 450/– செலவில் வாங்கப்பட்டுள்ளது.

**சமயப் பணி:**

சைவத்தையும் தமிழையும் வளர்த்து எங்களுக்குத் தந்தருளிய நாயன்மார்களில் முதன்மை பெற்றவர்களெனக் கருதப்படும் நால்வருக்கும் குருபூசைகள் நடத்தியுள்ளோம். இவ்வைபவங்களால் பிரசங்கங்கள், கதாப்பிரசங்கம், பண்ணிசை, திருமுறை ஓதல் ஆகியன நடத்தியுள்ளோம். அத்துடன் தேவாரப் போட்டிகளும் நடத்தி வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கியுள்ளோம்.

குருபூசை தினங்களில் குழந்தைகளை தேவாரம் ஓதச் செய்து உடனுக்குடன் சிறுசிறு ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கியுள்ளோம்.

மன்றத்தில் நவராத்திரி காலம் முழுவதும் கும்பம் வைத்து தினமும் பூசைகள் நடத்தியுள்ளோம். அத்துடன் வாணி விழாவும் மிகவும் விமரிசையாகச் செய்துள்ளோம். இதில் மட்டக்களப்பு விபுலானந்த இசைக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். மட்டக்களப்பு சங்கீத சபாக் கலைஞர்கள் வயலின், மிருதங்கம் ஆகிய பக்க வாத்தியங்கள் வாசித்து சங்கீத நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தார்கள். மட்டக்களப்பு சங்கீத சபா மிருதங்க வகுப்பு ஆசிரியரும் மாணவர்களும் நவராத்திரி விழாக்களில் முக்கிய பங்கு எடுத்து முன்னின்று நடத்தினார்கள். முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது என முடிவெடுத்துள்ளோம் அதன்பிரகாரம் அந்த நன்நாளில் சூழ்நிலை மோசமாக இருந்தபோதிலும் பேச்சுகளும் கவியரங்கமும் நடத்தியுள்ளோல். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுப்பதென்றும் தீர்மானிககப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் தினங்களில் விழா எடுக்க உத்தேசித்துள்ளோம்.

## சமூகப் பணி:

மட்டக்களப்பு மாநகர சபையினரால் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஏற்பாடு செய்துள்ள சிரமதானப் பணியில் பங்குகொண்டுள்ளோம். அரசாங்க அதிபர் மற்றும் சமூக நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு அழைப்பு வந்தபோதெல்லாம் அங்கு சென்று எங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளோம். எங்கள் மன்றம் மட்டக்களப்பு சிறைச்சாலை கைதிகள் புனர்வாழ்வுச் சங்கத்தில் அங்கம் வகிக்கிறது. அதன் மாதாந்தக் கூட்டங்களில் பங்குபற்றி வருகிறோம். மட்டக்களப்பு மாவட்ட சாரணர் இயக்கத்திலும் அங்கத்தவராகியுள்ளோம். அவ்வப்போது நடைபெறும் கூட்டங்களிலும் பங்குபற்றுகிறோம். மட்டக்களப்பில் அகதிகள் புனர் வாழ்வுச் சபைகளிலும் அங்கம் வகிக்கிறோம். அத்துடன் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். அண்மையில் வந்தாறுமூலையில் நடந்த அனர்த்தங்களைப் போய்ப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க மேலிடத்தில் தொடர்பு கொண்டுல்ளோம். இதற்கான ஆலோசனை மகாநாடுகளிலும் பங்குபற்றியுள்ளோம்.

## இறையடி சேர்ந்தோருக்கு அஞ்சலி:

மன்ற ஸ்தாபகர்களில் ஒருவரும் முன்னாள் பொதுச் செயலாளருமான திருவாளர் ஆறுமுகம் தவராசா அவர்கள் இறையடி சேர்ந்துள்ளார்கள். அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி மரணச் சடங்குகளில் பங்குபற்றி இரங்கல் உரைகளும் ஆற்றி அனுதாபப் பிரசுரமும் வெளியிட்டுள்ளோம்.

பாரதப் பிரதமரும் அணிசேரா நாடுகளின் தலைவியும் சமாதானத் தூதுவருமான ஸ்ரீமதி இந்திராகாந்தியவர்களுடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக 3—11—84 அன்று சகல மதத் தலைவர்களையும் பிரமுகர்களையும் அழைத்து ஓர் இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது.

## திட்டங்கள்:

மட்டக்களப்புப் பகுதிகளிலே வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றிய பெரியார்களுடைய நற்பணிகளை நினைவு கூர்ந்து வருங்கால சந்ததி

யினருக்கு அறிமுகம் செய்துவைக்குமுகமாக சில பெய ரில்லாத வீதிகளுக்கு அன்னூர்களுடைய பெயர்களைச் சூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்புப் பகுதிகளிலே வாழும் அறிஞர்கள், ஆலய குருக்கள்மார், ஆலய தர்மகர்த்தாக்கள், சோதிடர் கள் ஆகியோரைக் கொண்ட ஒரு மகாநாடு கூட்டி ஒரு குழுவை உண்டாக்கி தேவைப்படும்போது எமது ஆல யங்களை நிர்வகிப்பதற்கு அவர்களுடைய ஆலோசனைகளைப் பெறுவது என்றும் உத்தேசித்துள்ளோம். சூழ்நிலை சீரான வுடன் இம்மகாநாடு கூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு இளைஞர் களுக்கு நன்மை அளிக்கக்கூடிய முகாமைத்துவப் பயிற்சி அளிப்பது என்று உத்தேசித்துள்ளோம்.

**அங்கத்தவர்கள்:**

இவ்வாண்டு 79 புதிய அங்கத்தவர்கள் சேர்ந் துள்ளார்கள். தற்போதுள்ள அங்கத்தவர்கள் தொகை 399. இதில் ஆயுட்கால அங்கத்தவர்கள் 266. சாதாரண அங்கத்தவர்கள் 103. ஆயுட்கால அங்கத்தவர்களில் 28 பேர் காலமாகிவிட்டார்கள். மற்றும் 48 பேர் வேறு இடங்களுக்குப் போய்விட்டார்கள். தற்போது எஞ்சி யுள்ளோர் 323 பேர் மாத்திரமே. எங்களுடைய மன்ற அங்கத்தவர்கள் தொகை குறைந்துகொண்டு செல்வதால் மேலும் புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு அனை வரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறோம். எங்கள் இந்து இளைஞர்கள் மன்றத்தில் சேர்ந்து நற்பணி செய்து நன்மக்களாக வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

**மன்ற ஆதன விபரம்:**

மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான சப்பல் வீதியில் அமைந்துள்ள முற்றவெளி வரைபட இல. PP.78 இதில் 39ஆம் இல. துண்டுப் பூமி. விசா லம் 109 பேச்சர்ஸ்.

எல்லைகள்: வடக்கும்+மேற்கும் – மாநகரசபை சீமேந்துக் கட்டு வடிகால்.
கிழக்கு – மாநகரமன்ற வீதி - விறைன் டிறைவ்
தெற்கு – P. W. D. யாட் வீதி

இப்பூமி மட்டக்களப்பு மாநகரசபையிடம் 6–3–71ம் ஆண்டு தொடக்கம் 5–3–96ம் ஆண்டு வரையும் 25 வருட காலத்துக்கு வருடம் ரூபா 12/– வீதம் குத்தகையாக பிரசித்த நொத்தாரிஸ் கா. வ. மா. சுப்பிரமணியம் அவர்களால் 6–3–71இல் 789ம் இலக்கத்தில் எழுதப்பட்டது. இவ்வாதனம் மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் B 392/160 இல. பதியப்பட்டுள்ளது. குத்தகைப் பணம் செலுத்தப்படாமல் இருந்து 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1984ஆம் ஆண்டு வரைக்கும் மாநகரசபையிடம் ரூபா 168/– செலுத்தப்பட்டுள்ளது.

**பதிவு செய்தல்:**

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து சமயத் திணைக்களத்தில் சமய நிறுவனமாக 6/2BT/1/17 ஆம் இல. பதியப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

மேலும் சமூக சேவைத் திணைக்களத்திலும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எங்கள் மன்றத்தை நன்கொடை ஸ்தாபனமாக பாராளுமன்ற பிரேரணைமூலம் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

**நன்றி:**

நாங்கள் சென்று கேட்டபோதெல்லாம் மனமுவந்து பணம், பொருள், நல்லாசி ஆகியவற்றை வாரி வழங்கிய பெருமனம் படைத்தோருக்கும், அடிக்கடி இங்கு வந்து சிரமதானப் பணிகளில் பங்குகொண்ட இளைஞர்களுக்கும் பெரியோர்களுக்கும் எங்கள் மன்றத்தின் சார்பில் மனங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு உயரிய நோக்குடன் ஒற்றுமையாக நல்லதோர் சமுதாயத்தை உருவாக்குவோம் வாரீர் என்று அன்புடன் அழைக்கிறோம்.

எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

நன்றி.

இந்து இளைஞர் மன்றம்,
மட்டக்களப்பு. 31–3–85.

**இ. இரத்தினசிங்கம்**
பொதுக்காரியதரிசி

# இந்து இளைஞர் மன்ற கொடி தினத்திற்கு பணம் திரட்டியோர் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 1. | மட் \| நாவற்குடா அ. த. க. பாடசாலை | 47–30 |
| 2. | மட் \| கரவெட்டி தெற்கு அ. த. க. பாடசாலை | 18–85 |
| 3. | மட் \| வவுணதீவு அ. த. க. பாடசாலை | 46–25 |
| 4. | மட் \| மங்கிகட்டு அ. த. க. பாடசாலை | 11–45 |
| 5. | மட் \| அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் ம. வி. | 435–94 |
| 6. | மட் \| ஈச்சந்தீவு இ. கி. மி பாடசாலை | 38–90 |
| 7. | மட் நாவலடி அ. த க. பாடசாலை | 24–05 |
| 8. | மட் \| அர்ச்செபஸ்தியார் பாடசாலை | 105–62 |
| 9. | மட் \| மயிலம்பாவெளி அ. த. க. பாடசாலை | 19–85 |
| 10. | மட் \| ஆரைப்பற்றை நொத்தாரிஸ் பாடசாலை | 81–75 |
| 11. | மட் \| கின்னையடி சரஸ்வதி வித்தியாலயம் | 43–60 |
| 12. | மட் \| தாளங்குடா அ, த. க. பாடசாலை | 82–50 |
| 13. | மட் \| புதூர் அ. த. க. பாடசாலை | 110–85 |
| 14. | மட் \| சருவப்பங்கேணி அ. த. க. பாடசாலை | 147–20 |
| 15. | மட் \| மெதடிஸ்த மத்திய கல்லூரி | 467–40 |
| 16. | மட் \| கோயில்குளம் அ. த. க. பாடசாலை | 23–20 |
| 17. | மட் கல்லடி அ. த. க. பாடசாலை | 57–00 |
| 18. | மட் \| கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம் | 92–00 |
| 19. | மட் \| கறுவாக்கேணி அ. த. க. பாடசாலை | 90-25 |
| 20. | மட். \| புளியடிமுனை அ. த. க. பாடசாலை | 30–00 |
| 21. | மட் \| கிரான் ம. வித்தியாலயம் | 57–30 |
| 22. | மட் \| தாழங்குடா ஸ்ரீ. க. பாடசாலை | 25–00 |
| 23. | மட் \| கொக்கட்டிச்சோலை இ. கி. பாடசாலை | 110–00 |
| 24. | மட் \| மஞ்சந்தொடுவாய் அ. த. க. பாடசாலை | 105–05 |
| 25. | மட் \| முறக்கொட்டான்சேனை இ. கி. பாடசாலை | 258–45 |
| 26. | மட் \| கல்லடி முகத்துவாரம் அ. த. க. பாடசாலை | 46–65 |
| 27. | மட் \| சித்தாண்டி விநாயகர் வித்தியாலயம் | 103–80 |
| 28. | மட் \| முனைத்தீவு சக்தி வித்தியாலயம் | 103–00 |
| 29. | மட் \| பண்டாரியாவெளி அ. த. க. பாடசாலை | 16–00 |
| 30. | மட் \| வலையறவு மெ. மி. பாடசாலை | 48–20 |
| 31. | மட் \| அரசடி ம. வித்தியாலயம் | 463–45 |
| 32. | மட் \| சென்ற் திரேசா கொன்வென்ற் | 94–55 |
| 33. | மட் \| அர்ச். மைக்கல் கல்லூரி | 287–75 |
| 34. | மட் \| ஆனைப்பந்தி இ. கி. மி. பெண்கள் வித்தியாலயம் | 37–40 |
| 35. | மட் \| பாலமீன்மடு மெ. மி. பாடசாலை | 43-00 |
| 36. | மட் \| புனித மைக்கேல் க. வித்தியாலயம் | 54–50 |
| 37. | மட் \| நாவற்குடா தருமரெத்தினம் வித்தியாலயம் | 100–00 |
| 38. | மட் \| கோட்டமுனை ம. வித்தியாலயம் | 685–50 |

| | | | |
|---|---|---|---|
| 39. | மட் | மகிழவெட்டுவான் அ. த. க. பாடசாலை | 35-55 |
| 40. | மட் | வந்தாறுமூலை ம. ம. வித்தியாலயம் | 117-75 |
| 41. | மட் | விநாயகர் வித்தியாலயம் | 157-30 |
| 42. | மட் | ஏறுவூர் ப. நோ. கூ. ச. | 10-85 |
| 43. | மட் | மகா விஷ்ணு அ. த. க. பாடசாலை வந்தாறுமூலை | 340-00 |
| 44. | மட் | சிசிலியா கொண்வென்ற் | 49-35 |
| 45. | மட் | மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் | 55-75 |
| 46. | மட் | முனைக்காடு மெ. மி. பாடசாலை | 30-00 |
| 47. | கமு | அக்கரைப்பற்று இ. கி. மி. ம. வித்தியாலயம் | 173-30 |
| 48. | கமு | கோளாவில் விநாயகர் வித்தியாலயம் | 86-75 |
| 49. | கமு | பாசுபதேஸ்வரர் வித்தியாலயம் | 62-15 |
| 50. | மட் | விவேகாநந்தர் வித்தியாலயம் | 88-95 |
| 51. | மட் | திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆலையடிவெம்பு | 21-60 |
| 52. | மட் | பெருநாவலர் வித்தியாலயம் | 27-70 |
| 53. | மட் | ஆரைப்பற்றை ம. வித்தியாலயம் | 51-00 |
| 54. | மட் | சித்தாண்டி இ. கி. மி. வித்தியாலயம் | 89-65 |
| 55. | மட் | கொம்மாதுறை அ. த. க. பாடசாலை | 64-95 |
| 56. | மட் | செங்கலடி மெ. மி. த. க. பாடசாலை | 98-85 |
| 57. | மட் | மாமாங்கம் அ. த. க. பாடசாலை | 13-25 |
| 58. | மட் | தளவாய் அ. த. க. பாடசாலை | 43-40 |
| 59. | மட் | ஐயங்கேணி அ. த. க. பாடசாலை | 39-65 |
| 60. | மட் | பேத்தாழை விபுலாநந்த வித்தியாலயம் | 48-40 |
| 61. | மட் | புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம் | 60-00 |
| 62. | மட் | முதலைக்குடா ம. வி. | 70-00 |
| 63. | மட் | முதலைக்குடா மெ. மி. த. க. பாடசாலை | 50-00 |
| 64. | மட் | மஞ்சந்தொடுவாய் கொலனி பாடசாலை | 30-00 |
| 65. | மட் | வாகரை ம. வித்தியாலயம் | 119-35 |
| 66. | மட் | புதுமுகத்துவாரம் றோ. க. மி. பாடசாலை | 35-00 |
| 67. | மட் | குறிஞ்சாமுனை அ. த. க. பாடசாலை | 12-50 |
| 68. | கமு | வெஸ்லி கல்லூரி | 160-00 |
| 69. | மட் | சுங்காங்கேணி அ. த. க. பாடசாலை | 25-00 |
| 70. | மட் | ஏறுவூர் அ. த. க. பாடசாலை | 282-10 |
| 71. | மட் | குடியிருப்பு கலைமகள் பாடசாலை | 71-15 |
| 72 | மட் | வாழைச்சேனை ம. வித்தியாலயம் | 261-80 |
| 73. | கமு | விபுலாநந்த ம. ம. வித்தியாலயம் | 250-00 |
| 74. | கமு | சண்முக வித்தியாலயம் | 50-00 |
| 75. | கமு | இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை | 60-00 |
| 76. | கமு | விஷ்ணு வித்தியாலயம் | 40-00 |
| 77. | கமு | தம்பிலுவில் ம. வித்தியாலயம் | 583-85 |
| 78. | கமு | கலைமகள் த. வித்தியாலயம் | 128-85 |
| 79. | கமு | திருக்கோவில் மெ. மி. பாடசாலை | 29-70 |
| 80. | கமு | மணற்காடு தமிழ் வித்தியாலயம் | 54-35 |
| 81. | கமு | சரஸ்வதி வித்தியாலயம் | 67-95 |

| | | | |
|---|---|---|---|
| 82. | கமு | விநாயகபுரம் த. வித்தியாலயம் | 123-35 |
| 83. | கமு | முனையக்காடு த. வித்தியாலயம் | 13-50 |
| 84. | கமு | திருக்கோவில் த. வித்தியாலயம் | 12-00 |
| 85. | மட் | ஆரைப்பற்றை இ. கி. மி. த. பாடசாலை | 73-70 |
| 86. | மட் | விபுலாநந்த இசைக் கல்லூரி | 70-00 |
| 87. | மட் | வீச்சுக்கல்முனை றோ. க. மி. பாடசாலை | 8-65 |
| 88. | மட் | கல்லடி உப்போடை இ.கி.மி.பெண்கள் பாடசாலை | 219-50 |
| 89. | மட் | சிவாநந்த வித்தியாலயம் | 450-90 |
| 90. | | ஏறுவூர் வடக்கு ப. நோ. கூ. ச. | 324-55 |
| 91. | மட் | கன்னன்குடா ம. வித்தியாலயம் | 100-00 |
| 92. | மட் | வின்சன்ற் மகளிர் கல்லூரி | 102-95 |
| 93. | மட் | தம்பலவத்தை அ. த. க. பாடசாலை | 38-00 |
| 94. | மட் | களுதாவளை ம. வித்தியாலயம் | 31-25 |
| 95. | மட் | வெம்பு அ. த. க. பாடசாலை | 21-35 |
| 96. | மட் | கரையாக்கன்தீவு அ. த. க. பாடசாலை | 30-00 |
| 97. | மட் | சந்திவெளி மெ. மி. த. க. பாடசாலை | 109-80 |
| 98. | மட் | ஊறணி கொக்குவில் பாடசாலை | 66-90 |
| 99. | மட் | பிள்ளையாரடி அ. த. க. பாடசாலை | 71-70 |
| 100. | மட் | அரசடித்தீவு விக்னேஸ்வரர் வித்தியாலயம் | 330-00 |
| 101. | மட் | புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம் | 115-85 |
| 102. | மட் | தேற்றாத்தீவு றோ. க. த. க. பாடசாலை | 80-00 |
| 103. | மட் | கொத்தியபுலை அ. த. க. பாடசாலை | 11-00 |
| 104. | மட் | ஆரைப்பற்றை சுப்பிரமணிய வித்தியாலயம் | 35-65 |
| 105. | மட் | ஆசிரிய பயிற்சிக் கல்லூரி | 106-00 |
| 106. | திரு. | இரா. நாகலிங்கம் | 220-00 |
| 107. | மட் | கணேச வித்தியாலயம் வந்தாறுமூலை | 70-00 |
| 108. | திரு. | P. விஜயரெத்தினம் கல்முனை | 630-00 |

# மன்றக் கட்டடப் பணிக்கு நிதி வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வி. சரவணமுத்து | ரூபா 2000–00 |
| 2. | திரு. மு. அரசரெத்தினம் | 500–00 |
| 3. | Dr. V. விவேகானந்தராசா | 500–00 |
| 4. | Dr. S. ~~சிவ~~சுப்பிரமணியம் | 500–00 |
| 5. | திரு. அ. வாலேந்திரா | 500–00 |
| 6. | திரு. V. சிறிபத்மநாதன் | 500–00 |
| 7. | திரு. S. குணபாலன் | 1440–00 |

எங்கள் மன்ற ஆத்மீக தலைவரும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்க தலைவருமான ஸ்ரீமத் சுவாமி ஜீவனந்த ஜீ மகராஜ் அவர்கள் எங்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் ஆத்மீகபலம், தெய்வபலம் தரக்கூடிய வகையில் இறைவழியாகிய நல்வழியில் இட்டுச்செல்கிறார். அன்னாருக்கு எங்கள் மன்றத்தின் சார்பில் மனங்கனிந்த பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*WITH BEST COMPLIMENTS*

*FROM*



# P.T. ARASON & SONS

**26, BAR ROAD,**

**BATTICALOA.**

☎ 065 - 2351.

With Best Compliments

from

# Kavitha Trading Company

*Dealers for*

MOTOR AND TRACTOR SPARE PARTS

FLAMM HORNS Etc.

*And*

Dealer L. P. Gas.

**182, Trincomalee Road,**
**BATTICALOA.**

☎ 065 - 2323.

*With Best Compliments*

*from*



# ST. JOSEPH IRON WORKS

*SPECIAL IN ELECTRICAL WELDING*

*IRON ROOF TRUSSES, GATE GRILLS ETC.*

PROMPT ACTION ON ORDERS.

**No. 8, Boundary Road,**

BATTICALOA.

Prop: J. T. FERDINANDS.

# மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்

## அங்கத்துவ விண்ணப்பப் பத்திரம்

தயவு செய்து மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தில் என்னை ஓர் சாதாரண ஆயுட்கால அங்கத்தவராக சேர்த்துக்கொள்ளு மாறு பணிவுடன் விண்ணப்பிக்கின்றேன்.

1. முழுப் பெயர்
2. வயது
3. தொழில்
4. முகவரி

இத்துடன் சந்தாப்பணம் ரூபா ........................................ அனுப்புகிறேன்.

திகதி..............................

........................................
விண்ணப்பகாரர் ஒப்பம்

---

### அலுவலக உபயோகத்திற்கு

அனுமதிக்கப்பட்ட திகதி

அங்கத்துவ இல.

........................................
பொதுச்செயலாளர் கையொப்பம்

குறிப்பு: இதுவரையும் அங்கத்தவர்களாகச் சேராதோரைச் சேர்த்துக்கொள்ளவும். இவ்வாண்டுக்குரிய அங்கத்துவப்பணம் செலுத்தாவிட்டால் உடன் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

கத்தோலிக்க அச்சகம், மட்டுநகர்.